MCOP.No. 265/2022
Date : 24.09.2025
Pw – 2
பெயர்: ரெங்கசாமி
த/பெ: சின்னையா

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றமத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர்கள் அழைத்ததின்பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்த பழனிசாமி வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் வேறு நீதிமன்றங்களில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து சம்மந்தமான நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து சம்மந்தமாக எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. குறுவாண்டான்தெரு பஸ் நிறுத்தம் அருகில் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் நான் கந்தர்வக்கோட்டை நோக்கி சென்று கொண்டிருந்தேன். விபத்து நடைபெறும்போது நான் அந்த வாகனத்திற்கு பின்னால் சுமார் 50 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தேன். விபத்து நடந்தவுடன் எனக்கு சத்தம் கேட்டது. விபத்தில் இறந்தநபருக்கு நான் உறவினர் என்பதால் அவருடைய குடும்பதாருக்கு அதிகபடியான இழப்பீடு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ரெங்கசாமி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.